உ
சிவமயம்



மருதனார்மடம் - சுன்னாகம்

இராமநாதன் கல்லூரியில் அமர்ந்து அருள்புரியும்

# இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல்

## புனராவர்த்தன மகாகும்பாபிஷேக மண்டலாபிஷேகப் பூர்த்தி தின வெளியீடு:

## பழையமாணவர் சங்கம் இராமநாதன் கல்லூரி.

வெளியிடுபவர்:- திருமதி கனகேஸ்வரன் சரஸ்வதி
பழையமாணவி

ஆக்கம்:- திருமதி பண்டிதை வை.கணேசபிள்ளை

18.07.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# அதிபரின் ஆசியுரை

எனது கல்லூரி வளாகத்தில் வாகனத்தில் அமைந்திருக்கும் இராமநாதேஸ்வரப் பெருமானுக்கு சுபானுவருடம் ஆனித்திங்கள் 22ம் நாள் 06.07.2003 ஞாயிற்றுக்கிழமை உத்தர நட்சத்திரமும் ஸப்தமித் திதியும் கூடிய சுபவேளையில் மகா கும்பாபிடேகம் நடைபெற்று, தொடர்ந்து மண்டலாபிடேகம் நடைபெற்று வருகிறது. மண்டலாபிடேகப் பூர்த்தி நாளன்று இராம நாதேஸ்வரப் பெருமானுக்கு சங்காபிஷேகமும் திருக்கல்யாண வைபவமும் நடைபெறுவதும் வழக்கம். திருக்கல்யாண வைபவத்தின்போது திருவூஞ்சல் பாடப்படும். இம்முறை பழைய மாணவர் சங்கம் இராமநாதேஸ்வரப் பெருமானுக்கு திருவூஞ்சல் ஒன்றை ஆக்கித் தந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இத்திருவூஞ்சல் சிறப்பாக அமைந்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம் வல்ல இராமநாதேஸ்வரப் பெருமானின் அருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன் இதனை எல்லோரும் பாடிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி ஆ. சிவஞானசுந்தரம்
(அதிபர்)

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்
18.07.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமநாதேஸ்வரப் பெருமான் திருவூஞ்சல்

### காப்பு

ஏரார்ந்த பொழில்விளங்கு எழில்சூழ்ந்த
மருதனார் மடத்தில் மேவியுயர்
பாரார்ந்த புகழ்படைத்த இராமநாதன்
கல்லூரி வளாகத்தின் முன்றலிலே
சீரார்ந்த சிறப்புடனே வீற்றிருக்கும்
இராமநாத ஈஸ்வரர்மேல் ஊஞ்சல்பாட
காரார்ந்த கருணை மழைபொழியும்
கணபதியாம் பரராசசேகரனே காப்பு

1

பக்தியுடன் பரவும் அடியவர்தம்
அகலாத அன்பதுவே வடங்களாக
முத்தி பெற வழிகாட்டும் ஞானிகளின்
உள்ளமே உகந்த பீடமாக
கொத்துமலர்க் கோதை பார்வதியும்
இடமாய் இனிதமர்ந்த கோவே
நித்த மருள் பொலி மருதனார் மடமுறையும்
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

2

நந்தியொடு நாரதரும் இசைகள்பாட
நாரணனும் நான்முகனும் வடந்தொட்டாட்ட
முந்திவந்த பூதகணம் பொலிந்துஆட
பூமகளும் நாமகளும் வாழ்த்துக்கூற
கந்தமலர்தூவிப் பணிப்பெண்கள் வந்து
வழிபாடுசெய்து நின்று, நடனமாட
எந்தை இராம நாதஈஸ்வரரே இறைவியொடு
இங்கிதமாய் இருந்தமர்ந்து ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

வேதவொலி மந்திரங்கள் பூசனைகளேற்று
பாடுமடியவரின் பண்ணிசையும் கேட்டு
தீதகற்றும் திருவிழாப் பொலிவுங்கண்டு
உளமகிழும் இராமநாத ஈஸ்வரரே
போதுமலர்க் கரங்கள் கூப்பி வழிபாடாற்றும்
அடியவர்தம் அகத்திருளை அகற்றியென்றும்
ஆதியயன் மாலொடு அகில மெல்லாம்வாழ
அருள்பொழிந்து நின்று ஆடீரூஞ்சல்

4

பொன்கொன்றை தாதுசிந்திப் பொலிந்திலங்கப்
பொருந்திய நற்பூமரங்கள் அலங்கரிக்க
தேன்சிந்தும் கனிகள்தரும் மாமரங்கள்
பலாமரமும் வாழையொடு வில்வமேவி
வான்சிந்தும் மாமழையால் பொலிந்திலங்கும்
வாழிடங்கள் வனப்புமிக்க மரநிழற்கீழ்
மன்னும் மருதனார் மடமுறையும் மாமணியே
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

5

செந்தமிழும் செழுங்கலையும் ஓங்குபதி
மருதனார் மடமுறையும் தேவதேவே
பைந்தமிழில் பண்ணிசைத்துப் பாடலோடு
ஆடல்கண்டு மகிழப்பெரும் பார்புகழும்
இராமநாதன் கல்லூரிவளாகந் தன்னில்
நுண்கலைப் பீடந்தனை நன்கமைத்தீர்
சீர்பரவும் சிறப்புடையோய் இராமநாத
ஈஸ்வரரே அருள்சிறக்க ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

கருதரிய சிற்சபையில் நர்த்தமிடும்
கருணாகரக் கடவுளே கருணைக்கடலே
அரிபிரமாதி யார்க்கும் காண்டற்கரிய
சிவனே கற்பகமே இராமநாதேஸ்வரா
திரிபுரமெரித்தாயன்று தீயவர்க்கு அருளும்
செய்தாய் முக்கண்ணா முனிவரேறே
வருமிடர் களையவென்று கல்லூரியமர்ந்த
எங்கள் இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்

7

ஏழுலகும்வாழ ஆகமங்கள்வாழ மறைவாழ
சைவநெறி தானும் வாழச்
சூழுலகில் அரசரோடு அறவோர்வாழ
அந்தணரும் ஆனினமும் மகிழ்ந்துவாழ
நீழுலகம் நீதியுடன்நின்று நீடுவாழ
பூவையர்தம் கற்புநெறி பொலிந்துவாழ
வாழும் மருதனார்மடம் உறையும் செல்வ
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

8

கங்கையும் மதியுமாடக் காதிலணி
கண்டிகையும் செஞ்சடையும் மானுமாட
அங்கையினில் ஏந்துமனலுமாட அணிசெய்
உடுக்குடனே படம்விரித்து அரவுமாட
நங்கையவள் பார்வதியும் நயந்துஆட
பல்லப்ப வைரவரும் முன்னின்றாட
பொங்கரவம் அசைந்தாடும் இராமநாத
ஈஸ்வரரே அருள்பொலிய ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

இந்திரனும் சந்திரனும் இமையவரும்
போற்றநாளும் நயந்து ஆடீரூஞ்சல்
தொந்திக் கணபதியும் குமரேசனோடு
சேர்ந்து மகிழ்ந்திடவே ஆடீரூஞ்சல்
தக்கனுக்குத் தக்கபடி தலையைக்கொய்து
தண்டனைகள் தந்தவரே ஆடீரூஞ்சல்
திக்கற்றவர் புகலிடமே ஆடீரூஞ்சல்
திருமேவும் பெருமானே ஆடீரூஞ்சல்

10

முத்துமணித் தாமமாட ஆடீரூஞ்சல்
முழுவைரத் தோடாட ஆடீரூஞ்சல்
உத்தரியப் பட்டாட ஆடீரூஞ்சல்
உத்தமி பார்வதியுடனே ஆடீரூஞ்சல்
சித்தம் களிகூர ஆடீரூஞ்சல்
பத்தர்கட்கு அருள்செய்ய ஆடீரூஞ்சல்
எத்திக்கும் புகழ்மணக்க ஆடீரூஞ்சல்
எந்தை இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்.

## வாழி

திருவிழிகள் ஓர் மூன்றும் வாழி வாழி
தீங்களுஞ் செஞ்சடையும் வாழி வாழி
திருப்புயங்கள் இரண்டும் வாழி வாழி
செழுங்கருணைத் திருவருளும் வாழி வாழி
திருமுறைகள் பன்னிரண்டும் வாழி வாழி
திருமறைகள் ஒரு நான்கும் வாழி வாழி
திரு விளங்கும் கல்லூரி வாழி வாழி
கல்வி கற்கும் மாணவரும் வாழி வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெய மங்களம்

பார்வதி சமேதருக்கு ஜெயமங்களம்
பல்லுயிரும் காப்பவற்கு ஜெயமங்களம்
ஊரும் பேரும் அற்றவற்கு ஜெயமங்களம்
மருதனார் மடத்துறைபவற்கு ஜெயமங்களம்
ஆண்டி வேடம் பூண்டவற்கு ஜெயமங்களம்
அம்பலத்தில் ஆடுவாற்கு ஜெயமங்களம்
வேண்டும் வரம் தருவோற்கு ஜெயமங்களம்
வெள்ளை ஊர்தி வாகனற்கு ஜெயமங்களம்

## எச்சரீக்கை

பஞ்ச பூதமானவா பழவினை தீர்ப்பவா
வேதாகமமானவா எச்சரீக்கை
வஞ்சகப் பேய்களை வேரோழிப்பவா
மருதனார்மடத்துறைபவா – எச்சரீக்கை
ஆண்டி, அரசன், வேடன், புலவனாய்
புலையனாய் குருவாய் வந்தவா எச்சரீக்கை
வேண்டிய வரங்கள் தந்து சைவநெறி காப்பவா
பார்வதியின் மணவாழா (பரமனே) எச்சரீக்கை

## பராக்கு

கல்லூரி வளாகத்தில் அமைந்தவரே பராக்கு
நல்லபதி மருதனார்மடப் புண்ணியனே பராக்கு
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் மேலானவனே பராக்கு
கண்ணை இமைகாப்பது போல் காப்பவனே பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

தேவ லாலி சிவயோக லாலி – அவனி
துயர் துடைக்கும் தூய லாலி
போக லாலி பரஞ்சுடரே லாலி – சிவ
கங்கை சுமந்த பெருமானே லாலி
சூல லாலி சுடர்கொடியே லாலி – போர்
அரக்கர் குலமழித்த கோவே லாலி
மூல லாலி மூவா முதலே லாலி – என்றும்
எம்மிடர் களைவாய் தாயே லாலி.

சுபம்

ஆக்கம் திருமதி வை.கணேசபிள்ளை

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை (கணானி அச்சகம்),
450, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org